**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நத்தம்.**

**முன்னிலை :–திருமதி.ஜா.ஆஃப்ரீன் பேகம், எம்.காம்., எல்.எல்.எம்.,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், நத்தம்.**
**2026ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 28ம் நாள் செவ்வாய்கிழமை**
**இடைநிலை மனு எண்.7/2026**
**உள்**
**அசல் வழக்கு எண்.82/2018**

K.கணேசன் .... மனுதார்/வாதி

... எதிர் ...

1. காமாட்சி செட்டியார்(இறப்பு)
2. K.சோமன்(இறப்பு)
3. சாந்தி
4. பழனியம்மாள்
5. அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி/
   சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலர்.
6. தனி வட்டாட்சியர், நில எடுப்பு, நத்தம்.
7. S. பத்மனி
8. S.அசோக்குமார்
9. S. பாக்கியலெட்சுமி ....எதிர்மனுதார்கள்/பிரதிவாதிகள்

இந்த மனுவானது 04.03.2026ம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு 17.04.2026 அன்று இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.மூர்த்தி, அவர்கள் முன்னிலையாகியும், 7 முதல் 9 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.அய்யப்பன், அவர்கள் முன்னிலையாகியும், 1, 2 எதிர்மனுதாரர்கள் இறந்துவிட்ட நிலையிலும், 3 முதல் 6 எதிர்மனுதாரர்கள் ஒருதரப்பினராகவும், மனு மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்தும், இருதரப்பும் கேட்கப்பட்டு, இன்றுவரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த இந்த மனுவில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பித்திடும்,

**உத்தரவு**

1) இம்மனு உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 6 விதி 17ன் கீழ் வாதியின் வழக்குரையை திருத்தம் செய்ய உத்தரவிடவேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **மனுவின் சுருக்கம்:–**

இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் வாதியாவார். அசல் வழக்கானது 1 முதல் 4 எதிர்மனுதாரர்கள்/1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்குச் சொத்தில் மனுதாரர்/வாதி தனக்குரிய 1/5 பாகத்தை பிரித்து தனித்த சுவாதீனம் கொடுக்கும்படி முதல்நிலை தீர்ப்பாணை (Preliminary Decree) உத்தரவு பிறப்புவிக்கும்படியும், 1 முதல் 4 பிரதிவாதிகள் அவ்வாறு செய்ய தவறும்பட்சத்தில் நீதிமன்ற ஆணையர் மூலம் தனக்குரிய பாகத்தை நயமிடர் பார்த்து பிரித்து சுவாதீனம் வழங்கத்தக்கதாய் இறுதிநிலை தீர்ப்பாணை (Final Decree Partition) உத்தரவு பிறப்புவிக்கக்கோரியும் மற்றும் இதர பரிகாரங்கள் கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கானது வாதி தரப்பில் சாட்சிகள் விசாரணைக்காக 13.02.2026ம் தேதி பட்டியலில் வாய்தா ஏற்பட்டுள்ள நிலையில், மனுதாரராகிய தான் தனது வழக்கறிஞர் மூலம் தாவா வழக்கு கோப்புகளை எடுத்து பார்த்ததில் தாவா சொத்து சம்பந்தமாக கடந்த 29.05.2015ம் தேதிய உயில் சாசயனம் பற்றி வழக்கெழு வினா எழுந்துள்ளதும், மேற்படி உயில் சாசனம் சம்பந்தமாக 1, 2 பிரதிவாதிகள் தங்கள் எதிர்வழக்குரையில் குறிப்பிட்டுள்ளதும் தெரியவருகிறது. மேற்படி உயில் சாசனம் போலியாக சட்டத்திற்கு விரோதமாக 1, 2 பிரதிவாதிகளால் உருவாக்கப்பட்டதாகும். மேலும் மேற்படி உயில் சாசனம் இதுவரை சட்டப்படி நடைமுறைப்படுத்தவோ, ஊர்ஜிதப்படுத்தவோ இல்லை. பெயரளவில் மட்டுமே உள்ளது. எனவே அந்த

உயில் சாசனம் சட்டப்படி செல்லாது (Null and Void) என தமிழ்நாடு நீதிமன்றக் கட்டண சட்டப்பிரிவு 25(d)ன்படி விளம்புகை பரிகாரம் வேண்டியும் தாவா அசல் வழக்கை திருத்தம் செய்யவேண்டியது அவசியமாயும், நியாயமாயும் உள்ளது. இல்லாது போனால் மனுதார்/வாதியான தனக்கு ஈடு செய்ய முடியாத இழப்பும், பெருத்த கஷ்ட, நஷ்டமும் ஏற்படக்கூடும். அதனால் எதிர்மனுதாரர்களுக்கு எந்தவித இழப்பும் ஏற்படப்போவதில்லை. அசல் பிராதின் நெடுந்தலைப்பில் பாரா '8'-ல் 3வது வரியில் பெறவேண்டி என்பதற்கு அடுத்து யும் என சேர்த்தும் அதற்கு அடுத்து 1, 2 பிரதிவாதிகள் போலியாக சட்டத்திற்கு விரோதமாக ஏற்படுத்தியுள்ள தங்களது எதிர்வழக்குரையில் கூறியுள்ள கடந்த 29.05.2015ம் தேதி 1, 2 பிரதிவாதிகள் உயில் சாசனம் செல்லாது (Null and Void) என விளம்புகை பரிகாரம் வேண்டியும் என சேர்த்தும், அதேபோல் பிராது நெடுந்தலைப்பில் பாரா '10'-ல் கடைசியிலும், அதற்கு அடுத்துள்ள தாவா மதிப்பு விபரம் பாராவின் கடைசியிலும், அதேபோல் 29.05.2015ம் தேதிய உயில் உயில் சாசனம் செல்லாது என (Null and Void) விளம்புகை பரிகார மதிப்பு ரூ.5000/-க்கு அதற்கு கோர்ட் பீசு ஆக்ட் செக்சன் 25(d)ன்படி நீதிமன்ற கட்டணம் ரூ.150/-ம் செலுத்தப்பட்டுள்ளது எனவும் சேர்த்தும், அதேபோல் பிராதின் பரிகார பகுதியில் 'ஆ' பரிகாரத்திற்கு அடுத்து இ) பரிகாரத்திற்கு பதிலாக தாவா சொத்துக்கள் சம்பந்தமாக கடந்த 29.05.2015ம் தேதிய உயில் சாசனம் பத்திரம் செல்லாது (Null and Void) என விளம்புகை உத்தரவு பிறப்புவிக்கும்படியும் என சேர்த்தும் அதற்கு அடுத்தாற்போல் பிராதின் பரிகார பகுதியிலுள்ள இ), ஈ) பரிகாரத்தின் சீரியல் வரிசைகளை ஈ) உ) என சேர்த்தும் அசல் பிராதை திருத்தம் செய்ய வேண்டியுள்ளது. எனவே, மனுவின் திருத்தல் விபரத்தில் கண்டவாறு அசல் பிராதை திருத்தம் செய்ய உத்தரவிட வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>3 ) 9ம் எதிர்மனுதாரர்/ 9ம் பிரதிவாதி தரப்பு எதிருரை சுருக்கம்:</u>

இம்மனுவில் 9ம் எதிர்மனுதாரர் அசல் வழக்கில் 9ம் பிரதிவாதி ஆவார். 7ம் எதிர்மனுதாரர் 9ம் எதிர்மனுதாரரின் தாயார், 8ம் எதிர்மனுதாரர் சகோதரர் ஆவார். மனுதாரர்/வாதி தனது தந்தைக்கு எதிராக தாவா சொத்தில் பாகப்பிரிவினை கோரி அசல் வழக்கினை தாக்கல் செய்துள்ளார் என்றும், மேற்படி அசல் வழக்கில் தனது தந்தை கடந்த 08.01.2019ம் தேதி எதிருரை தாக்கல் செய்துள்ளார். மேற்படி எதிருரையை இதன் ஒரு அங்கமாக பாவித்துக்கொள்ள வேண்டும் எனவும், இந்த மனு சட்டப்படியும், சங்கதிகளின்படியும் நிலைநிற்கத்தக்கதல்ல. தாவா சொத்தை பொறுத்து எனது பாட்டி கிருஷ்ணம்மாள் தனது தந்தைக்கு கடந்த 29.05.2015 ம் தேதி ஒருபதிவு பெற்ற ஒரு உயில் சாசனத்தை எழுதி வைத்துள்ளார். மேற்படி உயிலின் அடிப்படையில் தனது பாட்டி இறந்தபின்பு தாவா சொத்தை தனது தந்தை அடைந்து அனுபவித்து வந்தார். மேற்படி விபரங்கள் அனைத்தும் இந்த மனுதாரர்/வாதிக்கு நன்கு தெரிந்தும் ஏழு வருடங்கள் கழித்து தாவா உயிலை பொறுத்து விளம்புகை பரிகாரம் கோரி பிராதை திருத்துவதற்கு திருத்தல் மனு செய்திருப்பது சட்டப்படி செல்லதக்கதல்ல. ஏனென்றால் காலவரையறை சட்டத்தின்படி மூன்று ஆண்டுகளுக்குள்ளாகவே மேற்படி பரிகாரத்தை கேட்க இயலும். அதனால் மேற்படி ஆவணத்தை பொறுத்து விளம்புகை பரிகாரம் கோருவது காலவரையறை தோஷத்தில் பாதிக்கப்பட்டுள்ளது.

(3.1) மேற்படி வழக்கில் கடந்த 21.11.2020 ம் தேதி வழக்கெழு வினாக்கள் (Issues) வனையப்பட்டுள்ளது. மேற்படி விபரமானது இந்த வாதிக்கு அப்பொழுதே தெரிந்திருந்தும் தற்பொழுது தான் தெரியவருவதாக கூறுவது ஏற்புடையதல்ல. மேற்படி அசல் வழக்கில் 5 மற்றும் 6 பிரதிவாதிகள் தங்களை தரப்பினர்களாக சேர்க்க கோரி மனு செய்து மேற்படி மனு I.A.No. 49/2021 நம்பராகி இருந்தது.

இந்நிலையில், இந்த மனுதாரர் / வாதி இந்த 5 மற்றும் 6 பிரதிவாதிகளுக்கு எதிராக மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் W.P. (MD) No. 8626/2020 என்ற மனு தாக்கல் செய்து மேற்படி மனுவில் Na.Ka.No. 31844/2017/E2 dated 10.01.2019 தேதிய நடவடிக்கையை விரைவாக முடிக்க வேண்டும் என்று பரிகாரம் கோரி மனு செய்திருந்தார். மேற்படி ரிட் மனு சம்பந்தமான விசாரணையிலும், தனது தந்தை தரப்பில் விசாரணைக்கு ஆஜராகி மேற்படி தாவா சொத்தின் உயில் சம்பந்தமாக ஆவணங்களை சமர்ப்பித்துள்ளார் என 5 மற்றும் 6 எதிர்மனுதாரர்கள் தரப்பினர் நீதிமன்றத்தில் கூறியதாலும், உரிமையியல் வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்த காரணத்தினாலும் மேற்படி ரிட் மனுவானது தள்ளுபடி செய்யப்பட்டது. அப்பொழுதே இந்த வழக்கின் தெரியவரும் இந்நிலையில் மேற்படி மனுவில் எனது தந்தை தரப்பில மனுதாரர்/வாதிக்கு தாவா சொத்து சம்பந்தமாக உயில் இருக்கும் விபரம் தெரியவரும். இந்நிலையில் மேற்படி மனுவில் தனது தந்தை தரப்பில் I.A.No. 49/2021 ல் எதிருரை தாக்கல் செய்யப்பட்டது. அதன்பின் முழுமையான விசாரணைக்கு பின்பு I.A.No. 49/2021 மாண்பமை நீதிமன்றத்தால் கடந்த 12.01.2021 ம் தேதி மேற்படி மனு அனுமதிக்கப்பட்டது. மேற்படி மனுவிலும் தனது தந்தை மேற்படி உயில் ஊர்ஜிதத்தில் இருப்பதை தெளிவாக கூறியுள்ளார்.

மனுதாரர்/வாதி முன்னாள் இராணுவத்தினர் நலப்பிரிவில் தந்தைக்கு எதிராக கடந்த 25.08.2020 ம் தேதி தாவா சொத்து சம்பந்தமாக புகார் ஒன்றினை அளித்துள்ளார். மேற்படி புகார் மனுவானது நத்தம் காவல்நிலைய விசாரணைக்காக அனுப்பப்பட்டு தனது தந்தை கடந்த 03.09.2020 ம் தேதி ஆஜராக வேண்டுமென்று மேற்படி காவல்நிலைய அழைப்பாணை அனுப்பப்பட்டது. (கு.வி.மு.ச. 160 பிரிவு) மேற்படி அழைப்பாணையின் பேரில் ஆஜரான தனது தந்தை தாவா சொத்து தனக்கு உயில் மூலம் பாத்தியம் என்று

கூறி ஆவணங்களை சமர்ப்பித்தார். அதன் அடிப்படையில் மேற்படி புகார் மனுவானது முடித்து வைக்கப்பட்டது. மேற்படி 03.09.2020 ம் தேதிய விசாரணையின் பேரில் மேற்படி மனுதாரர்/வாதிக்கு தாவா சொத்தை பொறுத்து தனது பாட்டி தனது தந்தைக்கு உயில் எழுதி வைத்த விபரம் தெரியும். ஷரத்து 54 மற்றும் 55ன்படி எந்த ஒரு ஆவணத்தையும் பொறுத்து விளம்புகை பரிகாரம் என்பது பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு என்றைக்கு தெரியவந்ததோ அன்றைய தேதியிலிருந்து 3 ஆண்டுகளுக்குள் கோர வேண்டும். இந்நிலையில் அதன் பின்னிட்டும் 5 ஆண்டுகள் கழித்து பிராதில் விளம்புகை பரிகாரம் கோரி திருத்தல் மனு தாக்கல் செய்திருப்பது ஏற்புடையது அல்ல. அதனை மறைத்துவிட்டு 6 வருடங்கள் கழித்து தாவா உயில் சம்பந்தமாக தனக்கு தெரியாது என்று பொய்யாக விளம்புகை பரிகாரம் கோரி இந்த திருத்தல் மனுவை தாக்கல் செய்துள்ளார். ஆகவே இந்த மனுவானது சட்டப்படி நிலைநிற்கதக்கதல்ல.

(3.2) தாவா சொத்தின் ஒரு பகுதியை நத்தம் நான்கு வழிச்சாலை விரிவாக்கத்திற்கான 5, 6 எதிர்மனுதாரர்களால் நிலம் கையகப்படுத்தப்பட்டு இழப்பீட்டு தொகை தனது தந்தைக்கு உயில் மூலம் வழங்குவதற்கு ஆட்சேபணை தெரிவித்த காரணத்தினால் ஷை தாவா சொத்திற்குரிய இழப்பீடு தொகையை தனது தந்தைக்கு இவ்வழக்கின் 5, 6 எதிர்மனுதாரர்கள் வழங்காமல் நிறுத்தி வைத்துவிட்டனர். அதன்பின்பு சங்கதிகளை கூறி மனுதாரர்/வாதி இந்த அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளார். மேற்படி உயில் ஊர்ஜிதத்திற்கு வந்த விபரம் இந்த மனுதாரர் /வாதிக்கு வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே தெரிந்திருந்தும் வேண்டுமென்றே மனுதாரர்/வாதி உயிலை பொறுத்து பரிகாரமும் கோராமல் காலம் கடந்து 7 ஆண்டுகள் கழித்து விளம்புகை பரிகாரம் கோரி பிராதை திருத்தக்கோரி மனு தாக்கல் செய்திருப்பது காலவரையறை தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது. மேலும் உரிமையியல் நடைமுறைச்சட்டம்

ஆர்டர் 2 ரூல் 2 ன்படி இந்த வாதி தனது வழக்குக்கு தேவையான அனைத்து பரிகாரங்களையும் கேட்காமல் வேண்டுமென்றே இருந்துவிட்டு தற்போது மேற்படி விளம்புகை பரிகாரம் கோரி பிராது திருத்தல் மனு தாக்கல் செய்திருப்பது ஏற்புடையதல்ல. இந்த மனுவை அனுமதிக்கும்பட்சத்தில் வியாஜ்ஜிய மூலமும் வழக்கின் தன்மையையும் முற்றிலும் மாறுபட்டு புதிய வழக்கும் வியாஜ்ஜிய மூலமும் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே, மனுவினை அதிகப்படியான செலவு தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

4) மனுதாரர் தரப்பில் சாட்சிய, சான்றாவணங்கள் தாக்கல் இல்லை. எதிர்மனுதாரர்கள் தரப்பில் 1 முதல் 3 ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டு குறியீடு செய்யப்பட்டுள்ளது. இருதரப்பும் கேட்கப்பட்டது. மனு, அபிடவிட் மற்றும் எதிருரை பரிசீலனை செய்யப்பட்டது.

5) இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை யாதெனில், மனுதாரர் மனுவில் கோரியுள்ள பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கதா?

6) <u>தீர்வு</u>

மனுதாரர் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் அவர்கள் வாதங்களின் போது, அசல் வழக்கானது எதிர்மனுதாரர்களுக்கு எதிராக 1/5 பாகப்பிரிவினை கோரி மனுதாரர் தாக்கல் செய்துள்ளார் என்றும், வழக்கு விசாரணைக்காக (Trial) 13.02.2026– அன்று பட்டியலிடப்பட்டுள்ளது என்றும், பிரதிவாதிகள் தரப்பில் கூறப்படும் 29.05.2015 தேதிய உயில் சாசனம் போலியானது என்றும், அது சட்டப்படி செல்லாது என விளம்புகை பரிகாரம் வேண்டியும், அதற்குரிய நீதிமன்றக் கட்டணத்தைச் செலுத்த தயாராக உள்ளதாகவும், எனவே பிராதைத் திருத்தம் செய்ய வேண்டியது அவசியம் என்றும், வழக்கு உரிய காலத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால், உயில்

ஆவணம் தொடர்பாக விளம்புகை பரிகாரம் கோருவதில் தடை இல்லை என்றும், அதனால் மேற்படி பரிகாரம் காலவரையறை சட்டத்தின் கீழ் பாதிப்படையவில்லை என்றும், ஆகையால் திருத்தல் மனு அனுமதிக்கத்தக்கது என்றும் எடுத்துரைத்தார்.

6.2) 9–வது எதிர்மனுதாரர் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் அவர்கள் வாதங்களின் போது, இந்த உயில் குறித்து வாதிக்கு ஏற்கனவே (2019–2020 காலகட்டத்திலேயே) நத்தம் காவல் நிலைய விசாரணை, ரிட் மனு விசாரணை மற்றும் இந்த அசல் வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரை ஆகியவற்றின் மூலமாக நன்கு தெரியும் என்றும், எ.ம.சா.ஆ.1 முதல் 3 வரையிலான ஆவணங்களிலும் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும், காலவரையறை சட்டத்தின்படி (Limitation Act), ஒரு ஆவணம் செல்லாது எனத் தெரியவந்த 3 ஆண்டுகளுக்குள் பரிகாரம் கோர வேண்டும் என்றும், ஆனால் 7 ஆண்டுகள் கழித்துத் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மனு காலவரையறை தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றும், இது வழக்கின் தன்மையை மாற்றும் என்றும் எனவே மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றும் வாதிட்டார்.

6.3) இருதரப்பு வாதங்கள், வழக்கு கோப்பு கவனமுடன் பரிசீலனை செய்யப்பட்டது. உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 6 விதி 17–ன் படி விசாரணை துவங்கிய பிறகு திருத்தல் மனு தாக்கல் செய்யப்பட்டால், வாதி "தகுந்த கவனத்துடன் செயல்பட்டும் (Due Diligence) இந்தச் சங்கதிகளை முன்னரே கொண்டு வர இயலவில்லை" என்று நிரூபிக்க வேண்டும். எதிர்மனுதாரர் தரப்பில் 2020–ம் ஆண்டிலேயே இந்த உயில் பற்றிய விபரம் வாதிக்குத் தெரிந்திருக்க வாய்ப்புள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. திருத்தமானது வழக்கின் தன்மையை மாற்றுகிறதா என்பதையும் அத்திருத்தம் எதிர் தரப்பினருக்கு ஈடு செய்ய முடியாத இழப்பை ஏற்படுத்துமா என்பதையும்

காண வேண்டியதுள்ளது. பிராதை திருத்தம் செய்யக்கோரியுள்ள பரிகாரம் வழக்கின் தன்மையை மாற்றுவதாக இல்லை என்பதை காண முடிகிறது.

6.4) காலவரையறை என்பது Mixed question of law and fact ஆக உள்ளது. மனுதாரர் ஏற்கனவே உள்ள வழக்கின் தொடர்ச்சியாக, கூடுதல் பரிகாரமாக இந்த மனு திருத்தத்தை கோரியுள்ளார். மாண்புமிகு உச்ச நீதிமன்றம் பல வழக்குகளில் வழக்குரையைத் திருத்துவது குறித்து சில தாராளவாதக் கொள்கைகளை வலியுறுத்தியுள்ளது. இந்த வழக்கில் உள்ள உண்மையான சர்ச்சையை தீர்மானிக்க மனுதாரர் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள திருத்தம் அவசியமாக உள்ளதாக என்பதை பரிசீலனை செய்ய வேண்டியதுள்ளது. வழக்கு சொத்து தொடர்பாக உயில் எழுதப்பட்டுள்ளது என்பது தெரியவரும் நிலையிலும், மனுதாரர் தரப்பில் மேற்படி உயில் தொடர்பாக அதன் உண்மைத்தன்மையை ஆட்சேபனை செய்யும் நிலையில், உயிலின் உண்மைத்தன்மையை ஆராயாமல் சரியான பாகப்பிரிவினை செய்ய முடியாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, தரப்பினர்களுக்கு இடையே உள்ள உண்மையான சர்ச்சையைத் தீர்க்க இந்தத் திருத்தம் அவசியம். பாகப்பிரிவினை வழக்கில், ஒரு உயிலை எதிர்த்து விளம்புகை பரிகாரம் கோருவது அவசியமான ஒன்றாக உள்ளது. மேற்கண்ட காரணங்களின் அடிப்படையிலும், மனுதாரர் ஏற்படுத்திய காலதாமதத்திற்கு அதிகப்படியான செலவுத்தொகையுடன் இம்மனுவை அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

முடிவாக, மனுதாரர் இந்த மனுவின் செலவு தொகையாக ரூ.5,000/- (ரூபாய் ஐயாயிரம் ரூபாய் மட்டும்) 9ம் எதிர்மனுதாரருக்கு வரும் 05.06.2026ம் தேதிக்குள் செலுத்த வேண்டும் என்றும் தவறும் பட்சத்தில் இந்த மனுவானது எவ்வித உத்தரவும் இல்லாமல் தள்ளுபடி செய்யப்படும் என்று உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது. அழைக்க 05.06.2026.

இவ்வுத்தரவானது என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 28ம் நாள் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.04.28 18:04:30 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**நத்தம்.**

**<u>மனுதாரர் தரப்பு சாட்சிய சான்றாவணங்கள்</u>:-** இல்லை.

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>**

| | | | |
|---|---|---|---|
| எ.ம.சா.ஆ.1 | | I.A.49/2021 மனு அபிடவிட்டு | அசல் |
| எ.ம.சா.ஆ.2 | | I.A.49/2021 மனுவின் கவுண்டர் அபிடவிட்டு | அசல் |
| எ.ம.சா.ஆ.3 | 12.11.2021 | I.A.49/2021 மனுவின் உத்தரவு | அசல் |

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.04.28 18:04:58 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**நத்தம்.**